தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 174/ந/2024

நாள். 13.12.2024

திருமதி. T.நூருன்னிஷா,
வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
வாணியம்பாடி நகராட்சி, வாணியம்பாடி,
திருப்பத்தூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி, பண்டிட் ஜவஹர்லால் நேரு ரோடு, கதவு எண்.1258/6 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி.T.நூருன்னிஷா என்பவரின் 05.12.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.12.2023 அன்று பெறப்பட்டு, 174/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி, பண்டிட் ஜவஹர்லால் நேரு ரோடு, கதவு எண்.1258/6 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி.T.நூருன்னிஷா என்பவர் தனது 05.12.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" It is humbly submitted that in Vaniyambadi town at Mohamed Ali Jinnah Road adhering to weekly market (வார சந்தை) and Daily market (உழவர் சந்தை) an on road bus stop (பயணிகள் நிழற்குடை) (Cutchery road to Khaderpet side) has been erected by the third respondent (Commissioner, Vaniyambadi) one and half decade ago to facilitate the general commuters coming from surrounding villages. At the same time no such on road bus stop was erected on the other side (Khaderpet to Cutchery road) which causing unbearable hardship to the general commuters going from Vaniyambadi to their native villages and other areas.

This was whether so as a latest development the third respondent (Commissioner, Vaniyambadi) instead of erecting on road bus stop on the left side adhering to weekly market (Khaderpet to Cutchery road) without bona fide reasons had proposed to shift the pre existing on road bus stop from its site to an another area which is too far from the weekly market that may create much difficulties to the farmers and general commuters to carry their agricultural products to the daily and weekly market.

As per the sources it came to the knowledge of the petitioner that the third respondent with an estimated cost of Rs.5,00,000/- obtained from M.P.LAD FUND (Member of Parliament Local Area Development Fund) has proposed to utilize the same for erecting on road bus stop at a traffic congested area.

It is humbly submitted that the site identified by the third respondent to erect ON ROAD BUS STOP is identified as an accident prone zone and the public going from Khaderpet side to their native villages regardless of adversity and assuming their precious lives as trivial were compelled to cross the busy road to catch their buses where vehicles are regularly ski each and every second and due to this panic situation apart frequent traffic jam and horrible accident occurs and many innocent public may lost their precious lives and belongings.

In further the proposal of erecting ON ROAD BUS STOP which is commonly called as near side bus stop is gross violation of the Circular RT 23018/04/2019 T(Part) dated. 16.11.2021 issued by the Government of India, Ministry of Road Transport and Highways (Transport section).

In further an amount of approximately Rs.1,00,000/- is required to remove and shift the pre existing On road bus stop to a new identified site which has to be near by Vaniyambadi Municipality and certainly it is a wrongful loss to the Municipal exchequer.

In further state that the third respondent instead of shifting the pre existing Bus stop and erecting the same in a new site by way of utilizing MP LAD FUND may erect a On Road Bus Stop on the other side (Khaderpet to Cutchery Road) which facilitate the general commuters without expending a single coin which is not only demand of public in large it is imperative of time.

It is further submitted that Vaniyambadi Municipality is faltering in the economic crisis. In this dilemma the act of the third respondent by shifting the pre existing on road bus stop to any place with an huge expenditure of six lakhs is nothing but to create impression among the public the Vaniyambadi Municipality is doing public welfare in excellent manner. The above arbitrary act of the third respondent waste of precious money and skill which has to be obstructed.

It is most respectfully submitted that the proposal of erecting On Road Bus Stop by the third respondent with the help of MP LAD FUND is certainly an excellent start

towards progress. At the same if the above fund is utilized in any other way the above humble cause of the third respondent will go in vain and an huge amount of more than Five lakh rupees will be wasted without bona fide reasons.

It is further submitted this petitioner by a communication dated: 23.11.2023 requested the respondents to refrain himself from shifting the pre existing On road Bus stop to any other place, but no response from the respondents till this date.

Hence, this petitioner without having any other alternative, effective and speedy remedy except to approach this Honorable Tamil Nadu Local Bodies Ombudsman by way of filing this petition for issue of an order restraining the third respondent from shifting pre existing On road bus stop to any other place.

Unless an order directing the third respondent to refrain himself from shifting the pre existing On road Bus stop from its present existence to any other place and consequently directing to erect On road Bus stand in the opposite site which may be most suitable and feasible to public in large is passed the petitioner and the public in large would be put into irreparable loss and great hardship.

Under these circumstances it is hereby prayed that this Tamil Nadu Local Bodies Ombudsman may be pleased to pass an order directing the third respondent to forebear from shifting pre existing On road bus stop (Cutchery road to Khaderpet side) to any other place and erect an On road bus stand on the opposite site (Khadepet to Cutchery road) utilizing MP LAD FUND to benefit the general public in large and pass such other further order/orders as this Tamil Nadu Local Bodies Ombudsman may deem fit and proper in the fact and circumstances of the case and thereby render justice" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு குறித்து வாணியம்பாடி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 19.01.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. வாணியம்பாடி நகராட்சி ஆணையர் தனது 17.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"மனுதாரருக்கு வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜின்னா சாலையில் வார்டு C பிளாக்–26, நகரளவு எண்.57/2–ல் இரண்டு கடைகள் உள்ளன. மனுதாரர் தனது 23.11.2023 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய குடும்பத்தின் வாழ்வாதாரம் மேற்படி இரு கடைகள் மூலம் வரும் வருமானத்தை நம்பியே உள்ளதெனவும், இந்நிலையில் கடைகளுக்கு முன் பயணிகள் நிழற்குடை அமைப்பதற்காக நகராட்சி அதிகாரிகள் ஆய்வு செய்து அளவீடு மேற்கொண்டு சென்றுள்ளதால், அவ்விடத்தில் தங்களுடைய கடைகளுக்கு முன்பு பயணியர் நிழற்குடை அமைக்கப்பெற்றால் தங்களின் வாழ்வாதாரம் சீர்குலைந்து விடும் என்பதால் தங்கள் கடைகள் முன் நிழற்குடை

அமைக்கும் திட்டத்தை உடனடியாக கைவிட்டு மாற்று வழியை கண்டுபிடித்து மாற்று இடத்தில் நிழற்குடை அமைக்க ஆவண செய்யுமாறு மனுதாரரால் கோரப்பட்டுள்ளது.

அதன் பேரில் இடத்தை நேராய்வு செய்ததில் மனுதாரர் தெரிவித்துள்ள இடத்தில் நிழற்குடை அமைக்கப்படவில்லை. இத்தகவல் மனுதாரருக்கு நகராட்சி அலுவலக கடிதம் ந.க.எண்.1856/2023/இ1 நாள். 17.10.2024 மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023–2024ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தை தவிர்த்து வேறு இடத்தில் வார்டு E. பிளாக் 14, நகரளவு எண்.2–ல் பயணியர் நிழற்குடை இடம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான வாணியம்பாடி நகராட்சி ஆணையர் ஆகியோரை 04.11.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 03.10.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் சார்பாக திரு.மதுரை பாரூக் அஹமது என்பவர் 04.11.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

புகார்தாரர் T.நூருன்னிஷா சார்பாக மதுரை பாரூக் அஹமது ஆகிய நான் இன்று 04.11.2024 விசாரணையில் ஆஜரானேன். மேற்கண்ட புகார் சம்மந்தமாக எதிர்மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்ட இடத்தில் நகராட்சி சார்பாக நிழற்கூடம் அமைக்கப்படவில்லை. மாற்று இடத்தில் பயணியர் நிழற்கூடம் அமைக்கப்படும் என்று எழுத்துப்பூர்வமாக வாக்குமூலம் அளித்துள்ளதால், நாங்கள் கடந்த 23.11.2023 அன்று அளித்த புகார் மனுவை முடித்து வைத்து ஆவண செய்யுமாறு மிக பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) வாணியம்பாடி நகராட்சி ஆணையர் 04.11.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை தெரிவித்துள்ளார்.

"மனுதாரர் தெரிவித்துள்ள இடமானது ஜின்னா சாலையில் வார்டு–C, பிளாக் –26, நகரளவு எண்.57/2–ல் கடைகளுடன் உள்ளன. மேலும் மனுதாரர் கூறிய இடத்தில் நகராட்சியின் மூலம் நிழற்கூடம் அமைக்கவில்லை. இப்பணிக்காக நிர்ணயிக்கப்பட்ட வார்டு E, பிளாக் –14, நகரளவு எண்.2–ல் தற்போது பயணியற் நிழற்கூடம் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் மனுதாரரின் கடைமுன், GI colour sheet நகராட்சியின் அனுமதியின்றி அமைத்திருப்பதால், நகராட்சி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை விதிகளின்படி அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.``

7) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரர் சார்பாக ஆஜராகிய திரு.மதுரை பாரூக் அஹமது அவர்களின் வாக்குமூலம், வாணியம்பாடி நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது புகார் சம்மந்தமாக புகார் மனுவில் குறிப்பிட்ட இடத்தில் நகராட்சி சார்பாக பயணியர் நிழற்கூடம் அமைக்கப்படவில்லை என்றும் மாற்று இடத்தில் பயணியர் நிழற்கூடம் அமைக்கப்படும் என்று எழுத்துப்பூர்வமாக வாக்குமூலம் அளித்துள்ளதால், தாங்கள் கடந்த 23.11.2023 அன்று அளித்த புகார் மனுவை முடித்து வைக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

வாணியம்பாடி நகராட்சி ஆணையரும் தனது வாக்குமூலம் மற்றும் அறிக்கையில் மனுதாரர் தெரிவித்துள்ள இடமான ஜின்னா சாலையில் வார்டு C, பிளாக்–26, நகரளவு எண்.57/2–ல் கடைகள் உள்ளன எனவும், மனுதாரர் கூறியுள்ள இடத்தில் நகராட்சியின் மூ ம் நிழற்கூடம் அமைக்கவில்லை, இப்பணிக்காக நிர்ணயிக்கப்பட்ட வார்டு E, பிளாக் –14, நகரளவு எண்.2–ல் தற்போது பயணியற் நிழற்கூடம் அமைக்கப்பட்டு வருகிறது என்றும், மனுதாரரின் கடை முன், GI colour sheet நகராட்சியின் அனுமதியின்றி அமைத்திருப்பதால், நகராட்சி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை விதிகளின்படி அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது வாக்குமூலத்தில் தாங்கள் புகார் மனுவில் கூறிய இடத்தில் நகராட்சியால் பயணியர் நிழற்கூடம் அமைக்கப்படவில்லை, மாற்று இடத்தில் பயணியர் நிழற்கூடம் அமைக்கப்படும் என எழுத்துப்பூர்வமாக நகராட்சியினரால் வாக்குமூலம் அளித்துள்ளதால், தங்களது 23.11.2023 நாளிட்ட புகார் மனுவை முடித்து வைக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளதை ஏற்று, இவ்வழக்கை இத்துடன் முடித்து வைக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 13–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திருமதி.T.நூருன்னிஷா,
எண்.1258/6, பண்டிட் ஜவஹர்லால் நேரு ரோடு,
வாணியம்பாடி – 635 751.
திருப்பத்தூர் மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
வாணியம்பாடி நகராட்சி,
வாணியம்பாடி.
திருப்பத்தூர் மாவட்டம்.